விலை ரூ. 10/=

ஈழநாடு
வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Eelanadu

09.08.2020 ஞாயிற்றுக்கிழமை

## சசிகலா ரவிராஜுக்கு நீதி கோரி தொடர் கவனயீர்ப்பு போராட்டம்!

யாழ்ப்பாணம், ஓக. 09

விருப்பு வாக்கு விவகாரத்தில் அநீதி இழைக்கப்பட்ட தாகக் கூறப்படும் சசிகலா ரவிராஜுக்கு நீதி கோரி முன் னெடுக்கப்பட்டு வரும் போராட்டம் தொடர் போராட்டமாக மாற்ற மடைந்துள்ளது.

மாமனிதர் ரவிராஜின் குடும்ப உறவினர்கள் மற்றும் ஆதரவாளர்களால் தென்மராட்சி பிரதேச செயலகத்துக்கு முன்பாக உள்ள ரவிராஜின் உருவச்சிலைக்கு முன்பாக நேற்றுக் காலை முதல் முன்னெடுக்கப்பட்டிருந்த அமைதி வழிப் போராட்டம் பிற்பகல் நிறுத்தப்பட்ட நிலையில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## இருவருக்கு தொற்று!



யாழ்ப்பாணம், ஓக. 09

யாழ். போதனா வைத்திய சாலை கொரோனா ஆய்வு கூடத்தில் நேற்று மேற்கொள் ளப்பட்ட கொரோனா தொடர்பிலான பரிசோதனை யில் விடத்தல் பளையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள இருவருக்கு தொற்று உறுதிப் படுத்தப்பட்டுள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

நாளாந்தம் கொரோனா தொடர்பில் வெளியிடுகின்ற அறிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

# கஜேந்திரகுமார், விக்கியுடன் இணைந்து செயற்பட பேச்சு!

### முயற்சியில் இறங்குகிறது ரெலோ




மன்னார், ஓகஸ்ட் 09

“தமிழ்த் தேசியக்கூட்டமைப்புடன் இணைந்து செயல்பட உள்ளதாக முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். அந்த விடயம் வரவேற்கத்தக்கது. அதேபோல் கஜேந்திரகுமார் பொன்னம் பலமும் இதில் இணைந்து கொள்ளவேண்டும்.

பாராளுமன்றத்துக்கு உள்ளே நாங்கள் எல்லோரும் ஒன்றாக செயற் படும் ஒரு சந்தர்ப்பத்தை உருவாக்குவதற்கு நிச்சயமாக நாங்கள் முயற்சி செய்வோம். அதற்கான பேச்சுக்களில் இறங்கவுள்ளோம்.”

- இவ்வாறு கூறியிருக்கின்றார் தமிழ்த் தேசியக்கூட்டமைப் பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ரெலோ தலை வருமான செல்வம் அடைக்கலநாதன்.

02

## தேர்தலில் நாடு முழுவதிலும் 6 சதவீத வாக்கு நிராகரிப்பு

கொழும்பு, ஓக. 09

2020 நாடாளுமன்றத் தேர்தலில் 6 சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகள் நிரா கரிக்கப்பட்டுள்ளன என்று தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் தெரிவித்துள்ளது.

தேர்தலில் வாக்களிப்பட்ட 12,343,302 வாக்குகளில், 744,373 வாக்குகள் அல்லது 6.03 சதவீத வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள் ளன.

02

## தமிழரசு தலைவர், செயலர் பதவிகள் பொதுக் குழுவே கூடித் தீர்மானிக்கும்

### சுமந்திரனுக்கு மாவை பதில்



யாழ்ப்பாணம், ஓக. 09

தமிழ் அரசுக் கட்சியின் தலை வர், பொதுச் செயலாளர் மற்றும் ஏனைய பதவிப் பொறுப்புக்கள் தொடர்பில் தமிழரசுக் கட்சியின் மாநாடும், பொதுக்குழுவுமே கட்சி யாப்பின்படி தீர்மானங்களை எடுக்கவல்லதாகும். பொது வெளியில், பத்திரிகையாளர் மாநாட்டில் மேற்குறித்த பதவிப் பொறுப்புக்கள் தீர்மானிக்கப் படுவதில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கின் றோம் என்று கட்சியின்

02

## 19 இல் திருத்தங்கள் செய்ய ஐக்கிய மக்கள் சக்தி ஆதரவு

### சஜித் அதிரடியாக அறிவிப்பு



கொழும்பு, ஓக. 09

இலங்கை அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தில் சில திருத் தங்களை செய்வதற்கு தமது கட்சி ஆதரவளிக்கும் என ஐக்கிய மக்கள் சக்தி நேற்று அறிவித்துள்ளது.

ஜனாதிபதிக்குள்ள நிறைவேற்று அதிகாரங் களைக்

02

## தெரிவாகிய எம்.பிக்களின் விவரம் அரச அச்சகத்திடம்

பொதுத்தேர்தலில்நாடா ளுமன்றத்துக்குத்தேர்ந்தெடுக் கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் பட்டி யலை வெளியிடுவதற்கான அதிசிறப்பு வர்த்தமானி தயா ரிக்கப்பட்டுள்ளதாக அரசு அச்சகத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வர்த்தமானி அறிவிப்பு தயாரித்து, சரிபார்ப்புக் காக தேர்தல் ஆணைக்குழு வுக்கு அனுப்பவேண்டும் என்று அரச அச்சகத்தின் தலைவர் கங்கனி கல்பனா லியானகே தெரிவித்தார்.

9ஆவது நாடாளு மன்றத்திற்கு தேர்ந்தெடுக் கப்பட்ட உறுப்பினர் களின் பட்டியல் ஆணைக்குழுவால் ஒப்பு நோக்கப்பட்டு திருப்பி அனுப்பப்பட்ட பின்னர் அதிசிறப்பு வர்த்தமானி வெளியிடப்படும் என்றும் அவர் கூறினார்.

## தமிழரசுக்கு தலைமை ஏற்பதற்கு நான் தயார்!

### சிறிதரன் அறிவிப்பு



கிளிநொச்சி, ஓக. 09

தமிழரசுக் கட்சியின் தலைமைப் பொறுப்பை அனைவருமாக இணைந்து வழங்கினால் ஏற்கத் தான் தயார் என கூட்டமைப்பின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவாகியுள்ள சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார். கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இந்த ஊடகவியலாளர்

02

## ஐ.தே.கவை சஜித்திடம் உடன் ஒப்படையுங்கள்

### ரணிலிடம் கோரிக்கை முன்வைப்பு

கொழும்பு, ஓக. 09

மக்கள் எதிர்பார்க்கும் தரப்புக்கு கட்சியை ஒப்படை யுங்கள் என ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் முன் னாள் நாடாளுமன்ற உறுப் பினர் நளின் பண்டார வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்-

வஜிர அபேவர்த்தன, ஐக்கிய தேசியக் கட்சியின் தலை மைத்துவத்தில் மாற்றங்களை ஏற் படுத்த வேண்டிய

02

### சசிகலா விருப்பு வாக்கு விவகாரம்:

## சுமந்திரன் எம்.பி. பதவியேற்பதற்கு இடைக்காலத் தடை கோர முயற்சி!

யாழ்ப்பாணம், ஓக. 09

தேர்தலில்விருப்பு வாக்கு கணக்கெடுப்பில்சசிகலா ரவி ராஜுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு தீர்வு கிடைக்கும் வரை சுமந்திரன் பாராளு மன்ற உறுப்பினராகப் பதவியேற்க இடைக்காலத் தடைகோரி வழக்கு தாக்கல்செய்ய உள் ளார்எனமுன்னாள் வடக்கு மாகாண

02

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## தமிழரசு தலைவர்....

தலைவர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் செயலாளரும் தோல்வியடைந்த நிலையில் அந்தப் பதவிகளில் மாற்றம் ஏற்படும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர், எம்.ஏ.சுமந்திரன் நேற்று முன் தினம் ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்திருந்தார்.

அது தொடர்பிலேயே தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா நேற்று மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

தமிழ் மக்கள் வரலாற்றில் தமிழின விடுதலைப் போராட்டத்தினாலும், போர்களினாலும், இனக் கலவரங்களினாலும் தொடர்ச்சியான இன அழிவுகளையும் சமூக பொருளாதார இழப்புக்களையும் அவலங்களையும் தமிழ் மக்கள் சந்தித்துள்ளனர். இவை தொடர்கின்றன. இவற்றிற்கு இன்னுமே ஒரு தீர்வு ஏற்படவில்லை.

இப்பொழுது நடைபெற்று முடிந்த 2020 பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பல வகையான நெருக்கடிகளுக்கு மத்தியில் ஆறுதலான ஒரு ஜனநாயக வெற்றியைப் பெற்றிருக்கிறது. அதேவேளை, தேர்தல் நடைமுறையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஏற்பட்ட பின்னடைவுகளுக்கும் கூட்டமைப்பு பொறுப்பேற்கின்றது. இவை பற்றித் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைமை விரைவில் கூடி ஆராயவுள்ளது.

*2020-08-05* ஆம் திகதி பொதுத் தேர்தலில் கொரோனா வைரஸ் நோய் தொற்றுச் சூழலிலும், பெருமளவிலான அரசியர் கட்சிகளும், சுயேச்சைக் குழுக்களும் தீவிர பரப்புரைகளில் ஈடுபட்டும், வேறுபட்ட தேர்தல் அறிக்கைகளை முன்வைத்தபொழுதிலும் வர்த்தக ரீதியிலான பல சலுகைகளையும், வேலை வாய்ப்புக்களையும் முன்வைத்த பொழுதும் எம் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் அறிக்கையையும் கருத்துக்களையும் தேர்ந்தெடுத்துக் கணிசமான பாராளுமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்துள்ளனர்.

அதற்காக எம் தமிழ்த் தேச மக்களுக்கும், வாக்காளப் பெருமக்களுக்கும் இதயம் நிறைந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம். தமிழ் மக்களின் விடுதலைக்கும், தமிழ்த் தேச விடுதலைக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தம்மை முழுமையாக அர்ப்பணித்து செயல்படுவார்கள் எனவும் உறுதிபடத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்தோடு தமிழரசுக் கட்சியின் உயர்பீடமும் (அரசியற் குழுவும்) அடுத்து மத்திய செயற்குழுவும் கூட்டப்பட்டு, தேர்தல் காலத்திலும் தேர்தல் காலத்திற்கு அண்மித்த காலப்பகுதியிலும் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் உறுப்பினர்கள் நடவடிக்கை தொடர்பில் முழுமையாக விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது. அதன்படி நடவடிக்கைக்குழு பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர் தலில் அடைந்த வெற்றி, ஏற்பட்ட இழப் புத் தொடர்பில் கூட்டமைப்பு உயர் பீடம் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப் பதற்கு முன் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு சார்பில் தேர்தல் தொடர்பில் இன்று *(08.08.2020)* கேள்வி எழாமலே வெளியிடப்பட்ட தன்னிச்சையான கூட்டுப் பொறுப்பற்ற பத்திரிகை செய்திகள் மீண்டும் கட்சிகளுக்குள்ளும், மக்களிடத்திலும் விமர்சனங்களையும், சர்ச்சைகளையும் ஏற்படுத்தியுள்ளன. இவை கட்டுப்படுத்தப்பட வேண்டும்.

மிக விரைவில், உரிய வேளையில் தேசியப் பட்டியல் நியமனம் தொடர்பில் தமிழரசுக் கட்சி உயர்மட்டக் குழுவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உயர்மட்டக் குழுவும் தனித் தனியே ஆராய்ந்து கூட்டாக முடிவை அறிவிக்கவுள்ளன.

தமிழரசுக் கட்சியின் தலைவர், பொதுச் செயலாளர் மற்றும் ஏனைய பதவிப் பொறுப்புக்கள் தொடர்பில் தமிழரசுக் கட்சியின் மாநாடும், பொதுக்குழுவுமே கட்சி யாப்பின்படி தீர்மானங்களை எடுக்கவல்லதாகும். பொதுவெளியில், பத்திரிகையாளர் மாநாட்டில் மேற்குறித்த பதவிப் பொறுப்புக்கள் தீர்மானிக்கப்படுவதில்லை என்பதனைத் தெரிவித்துக் கொள்கின்றோம்-என்றுள்ளது.

## சுமந்திரன் எம்.பி.....

சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

மாமனிதர் ரவிராஜின் மனைவியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற வேட்பாளருமான சசிகலா ரவிராஜ்க்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நீதி கோரி தென்மராட்சி பிரதேச செயலகத்துக்கு முன்பாக உள்ள ரவிராஜின் உருவச்சிலைக்கு முன்பாக அமைதி வழிப் போராட்டம் நேற்று காலை முதல் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் அநீதி இழைக்கப்பட்ட சசிகலா ரவிராஜை அவரது இல்லத்துக்கு நேரில் சென்று வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர்களான எம். கே.சிவாஜிலிங்கம் மற்றும் அனந்தி சசிதரன் ஆகியோர் சந்தித்தனர்.

இங்கு கருத்துத் தெரிவிக்கும்போதே சிவாஜிலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வாக்கு எண்ணும் பணி இடம்பெற்ற யாழ். மத்திய கல்லூரி வளாகத்தில் ஏற்பட்ட அசம்பாவிதம் மற்றும் அநீதி இழைப்பு ஆகியவற்றால் பாதிப்புற்ற சசிகலா-ரவிராஜ் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவிக்கும் முகமாக சந்தித்துள்ளோம்.

இச்சந்திப்பின்போது விருப்பு வாக்கு விடயத்தில் இழைக்கப்பட்ட அநீதிக்கு உரிய நீதி கிடைக்க வேண்டும். அவர் விரும்பினால் அது தொடர்பில் தேர்தல் ஆணையாளர் உள்ளிட்ட தொடர் புடையவர்களை சந்தித்து அடுத்த கட்ட நடவடிக்கையை முன்னெடுக்கத் தயாராக உள்ளோம். அதுவரை பாராளு மன்ற உறுப்பினராக தெரிவாகியிருக்கும் எம்.ஏ.சுமந்திரன் பாராளுமன்ற உறுப் பினராக பதவியேற்க இடைக்காலத் தடை கோரி வழக்கு தாக்கல் செய்யலாம் எனவும் கூறியுள்ளோம்.

திருமதி சசிகலா-ரவிராஜ் மது கோரிக் கைகள் குறித்து சாதகமாக பரிசீலிப்ப தாகத் தெரிகிறது. அவர் சம்மதம் தெரி வித்தால் தாம் அதற்கான முயற்சிகளில் ஈடுபட உள்ளோம்-என்றார்.

## ஐ.தே.கவை....

அவசியமில்லை என்று கூறியுள்ளார். அதாவது, அவர்கள் இன்னமும் தங்களில் பிழைகளைத் திருத்திக் கொள்ள முற்படு கிறார்கள் இல்லை என்றே தெரிகிறது.

ஐக்கிய தேசியக் கட்சி இன்று அழிவடைந்துள்ளது என்பதை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இந்த நிலையில் ரணில்விக்கிரமசிங்க உள்ளிட்ட இந்த தரப்பிடம் நாம் மீண்டும் ஒன்றைவலியுறுத்துகிறோம்.

அதாவது, இனியேனும் மக்களின் ஆணைக்கு செவிசாய்த்துஅவர்கள் வழங்கிய ஆணைக்கு இணங்க, புதிய மாற்றங்களை ஏற்படுத்துங்கள். மக்கள் எதிர்ப்பார்க்கும் தரப்புக்கு கட்சியை ஒப்படையுங்கள். இப்போதைய நிலைமையில் மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டதலைவராக சஜித் பிரேமதாஸ காணப்படுகிறார்.

இதனைப் புரிந்துக் கொண்டுஐக்கிய தேசியக் கட்சியை இவரிடம் ஒப்படை யுங்கள். ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் என்ற ரீதியில் கட்சிக்கு இன்று ஏற்பட்டுள்ள நிலைமையை எம்மால் பொறுத்துக் கொள்ள முடியாதுள்ளது-என்றார்.

## கஜேந்திரகுமார்....

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நேற்று சனிக்கிழமை காலை *10.30* மணியளவில் இடம் பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் அவ்வாறு கூறினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஒற்றுமை இல்லாமல் செயல்படவேண்டாம் என்ற நிலைப்பாட்டில் மக்கள் தங்கள் வாக்குரிமையை பயன்படுத்தி உள்ளனர்.

அந்த வகையில் *14* ஆசனங்களை கொண்ட நாங்கள் இன்று *10* ஆசனங் களுடன் இருக்கின்றோம் என்றால் அது சிந்திக்கப்படவேண்டிய விடயம்.

மக்கள் மத்தியில் எங்கள் செயற்பாடுகள் இனி வரும் காலங்களில் மாற்றமடையவேண்டும். துரிதமாக அபிவிருத்திச் சம்பந்தமாக சிந்திக்க வேண்டும் என்பது இன்று நாங்கள் உணர்ந்த விடயம்.

தமிழ்த் தரப்பில் யாழ்ப்பாணத்தை பொறுத்த மட்டில் தமிழர் தரப்புக் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு *3* ஆசனங்களை வெற்றி கொண்டாலும் ஏனையவர்களும் வாக்குகளைப் பெற்று ஆசனங்களை வென்றுள்ளனர்.

மக்களுடைய விருப்பம் நாங்கள் அனைவரும் ஒற்றுமையாகச் செயற்படுவதே.

முன்னாள் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தான் இணைந்து செயல்பட உள்ளதாக தெரிவித்திருந்தார். அந்த விடயம் வரவேற்கத்தக்கது. அதேபோல் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இதில் இணைந்து கொள்ளவேண்டும்.

தனிப்பட்ட நபர்கள் மீதான விருப்பு வெறுப்புகளை ஒரு பக்கம் வைத்து விட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பாக நாங்கள் செயல்பட வேண்டும். பாராளுமன்றத்துக்கு உள்ளே நாங்கள் எல்லோரும் ஒன்றாக செயற்படுகின்ற ஒரு சந்தர்ப்பத்தை உருவாக்குவதற்கு நிச்சயமாக நாங்கள் முயற்சி செய்வோம்.

அந்த வகையில் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தோடும், முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரனோடும் நாங்கள் பேச இருக்கின்றோம்.

தனிப்பட்ட விருப்பு வெறுப்புகள் ஒரு பக்கம் வைத்து விட்டு எங்களுடைய மக்கள் சார்ந்த விடயங்களில் நாங்கள் ஒன்றாக செயற்படுவதற்கான முயற்சிகளை நாங்கள் மேற்கொள்ள இருக்கின்றோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் குறித்து ஒரு சர்ச்சை தற்போது எழுந்துள்ளது.

## தமிழரசுக்கு தலைமை....

சந்திப்பு நேற்று காலை கிளிநொச்சியில் அமைந்துள்ள தமழரசுக் கட்சி அலுவலகத்தில் இடம்பெற்றது.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழரசுக் கட்சியின் தலைமைப் பொறுப்பு ஏற்பது தொடர்பில் எனக்கு தனிப்பட்ட ஆசை ஏதும் கிடையாது. இன்னுமொரு தலைமையைத் தூக்கி எறிந்துவிட்டு அந்த இடத்தில் நான் இருக்கவேண்டும் என்ற எண்ணமும் எனக்கு இல்லை. தமிழரசுக் கட்சியில் மாற்றம் ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும். அது உடனடியாக ஏற்படுத்தவேண்டிய தேவை இல்லை. தேர்தல் முடிவுகளை வைத்து தலைமைகளை மாற்றவேண்டும் என கூறுவது பொருத்தமற்றது.

தமிழரசுக் கட்சியில் இளம் இரத்தம் பாய்ச்சப்படவேண்டும். மாற்றங்கள் ஏற்படுத்தப்படவேண்டும். அதற்காக எனக்குத் தலைமை பதவி கிடைக்கவேண்டும் என்ற எண்ணம் கிடையாது. அனைத்து உறுப்பினர்களும், மக்களும் இணைந்து ஒருமித்து கோரினால் அந்த தலைமையை ஏற்க நான் தயாராகவே உள்ளேன். அனைவரினதும் சம்மதத்துடனேயே அன்றி இன்னொருவரது பதவியை பறித்து அதில் அமரவேண்டும் என்ற எண்ணம் எனக்கு இல்லை-என்றார்.

தேசியப்பட்டியல் ஆசனம் நியாயமான முறையில் வழங்கப்பட வேண்டும். என்னைப் பொறுத்த மட்டில் மக்கள் நிராகரித்தவர்களுக்கு என்ன செய்வது என்பது தொடர்பாக சிந்திக்கவேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பொறுத்த மட்டில் பங்காளிக் கட்சிகளோடு சேர்ந்துதான் ஒரு முடிவு எட்டப்பட வேண்டும்.

தமிழரசுக் கட்சி தனியாக முடிவு எடுக்கக்கூடாது என்பது எனது கருத்து. நாங்கள் மூன்று கட்சிகளும் இணைந்து யாரை போடுவது என்பது தொடர்பாக தீர்மானம் எடுக்கவேண்டும்.

இந்த விடயத்தில் எல்லோருக்கும் உரித்து உள்ளது. இந்த தேசியப் பட்டியல் சம்பந்தமாக யாரும் நினைத்தவரை கொண்டு வருவதற்கான வாய்ப்பை ஒருபோதும் நாங்கள் ஏற்றுக்கொள்ளமாட்டோம்.

ஆகவே எங்களுடன் பேச வேண்டும். இந்த பேச்சு ஊடாக நாங்கள் ஒற்றுமையான ஒரு தீர்மானத்தை எடுக்கவேண்டும். -என்றார்.

## தேர்தலில்....

வரலாற்றில் முதல்முறையாக ஒரு தேர்தலில் இவ்வளவு அதிக தொகையான வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளன என்று தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்தின் தேசிய ஒருங்கிணைப்பாளர் மஞ்சுளா கஜநாயக்க தெரிவித்தார்.

நிராகரிக்கப்பட்ட வாக்குச்சீட்டுகள் அதிக எண்ணிக்கையில் தேர்தல் முறை குறித்து வாக்காளர்களுக்கு அறிவு இல்லாதார்கள் இருக்கலாம் அல்லது தேர்தலில் முன்வைக்கப்பட்ட வேட்பாளர்கள் மீது வாக்காளர்கள் அதிருப்தி அடைந்துள்ளனர் என்று கஜநாயக்க தெரிவித்தார்.

## 19 இல் திருத்தங்கள்....

குறைத்து பாராளுமன்றத்துக்கு அதிக அதிகாரங்களை வழங்கும் வகையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து கடந்த ஆட்சிக் காலத்தில் *19* ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றின.

இந்நிலையில் *19* ஆவது திருத்தத்தில் சுயாதீன அமைப்புக்களின் செயற்பாடுகளில் அரசியல் தலையீடற்ற செயற்பாடு, அரசியல் தலையீடு இல்லாத நிறுவனங்களின் செயல்பாடுகள் ஆகியவற்றைத் தொடர்ந்து பேண ஐக்கிய மக்கள் சக்தி அழுத்தம் கொடுக்கும் எனவும் அதன் தலைவர் சஜித் பிரேமதாஸ கூறினார்.

நேற்றுக் கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பேசிய சஜித், அரசமைப்பின் *19* ஆவது திருத்தத்தை முழுமையாக ஒழிப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தி ஆதரவளிக்கமாட்டாது.

எமது அரசியல் கொள்கையின் ஒரு பகுதியாக, *19* ஆவது திருத்தத்தை பாதுகாக்க ஐக்கிய மக்கள் சக்தி செயற்படும்.

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியாக, பொருளாதாரம், அரசியல், அனைத்து இன மக்களின் கலாசார மற்றும் மத விவகாரங்களின் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டுக்காக நாங்கள் செயல்படுவோம். - என்றார்.

## தவறுக்கு வருந்துகிறோம்

நேற்று வெளியாகிய ஈழநாடு தினசரியின் முன் பக்கத்தில் **'66 முன்னாள் எம்.பிக்கள் தோல்வி'** என்ற தலைப்பில் வெளியாகிய செய்தியில் கடந்த பொதுத் தேர்தலில் யாழ். தேர்தல் மாவட்டத்தில் வெற்றியீட்டிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தனின் பெயர் தவறுதலாக இடம்பெற்று விட்டது. இத் தவறுக்கு வருந்துகிறோம்.

(ஆ-ர்)

ஈழநாடு
Eelanadu
09.08.2020 ஞாயிற்றுக்கிழமை
சார்வரி, ஆடி 25

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

gmail:- eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 492 7805

# தமிழரசுக் கட்சியின் தலைமைதான் அனைத்து பிரச்சினைகளுக்கும் காரணமா?

வடக்கு - கிழக்கில் தமிழரசுக் கட்சிக்கு ஏற்பட்ட பின்னடைவுகளுக்கு கட்சியின் தலைவர் மற்றும் செயலாளர்தான் காரணமென்று வெற்றி பெற்றிருக்கும் ஏம்.ஏ.சுமந்திரன் தெரிவித்திருக்கின்றார். இதனைத் தொடர்ந்து தமிழரசுக் கட்சிக்குள் இளம் இரத்தம் பாய்ச்சப்பட வேண்டுமென்று கூறியிருக்கும் வெற்றி பெற்றிருக்கும் சிவஞானம் சிறிதரன், தமிழரசுக் கட்சியின் தலைமையை எல்லோருமாக இணைந்து தந்தால் ஏற்கத் தாயாரென்று தெரிவித்திருக்கின்றார். சுமந்திரனும் சிறிதரனும் வெற்றிக்காக வியூகமைத்து செயற்பட்டவர்கள் என்பதையும் இந்த இடத்தில் குறித்துக்கொள்வோம். 'யானைவரும் பின்னே மணியோசைவரும் முன்னே' என்பதுபோல் சுமந்திரனும் தமிழரசுக் கட்சியின் தலைமை பற்றி பேசுகின்றார். அதனைத் தொடர்ந்து அதனை ஆமோதிப்பது போல் சிறிதரனும் பேசுகின்றார். அவ்வாறாயின் மாவை சேனாதிராசாவை வெளியேற்றவேண்டுமென்னும் எண்ணத்தில் சுமந்திரனும் சிறிதரனும் ஒன்றாக செயற்பட்டிருக்கின்றனரா என்னும் கேள்வியும் எழுகின்றது. உண்மையில் இவர்கள் கூறுவது போன்று தமிழரசுக் கட்சியின் பின்னடைவுகளுக்கு மாவை சேனாதிராசா மட்டும்தான் காரணமா? வேறு எவரும் காரணமில்லையா?

உண்மையில் மாவை சேனாதிராசாவுக்கும், கடந்த ஐந்து வருடகால தமிழரசுக் கட்சியின் முக்கிய தீர்மானங்களுக்கும் எந்தவொரு தொடர்பும் இல்லை. மாவை ஒரு பெயரளவு தலைவராகவே இருந்தார். முக்கிய அரசியல் முடிவுகள் அனைத்தும் சம்பந்தனாலும் சுமந்திரனாலும்தான் தீர்மானிக்கப்பட்டன. சுமந்திரன் தொடர்பில் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர்கள் அதிருப்தியடைந்து, அவ்வப்போது மாவையின் வீட்டில் முகாமிட்ட போதிலும் கூட, மாவையால் எதனையும் செய்ய முடியாது கைகளை பிசைந்துகொண்டிருந்தார். அந்தளவுக்கு மாவை கட்சிக்குள் செயலிழந்து போயிருந்தார். அவ்வாறான ஒருவர் எவ்வாறு தமிழரசுக் கட்சியின் பின்னடைவுகளுக்குக் காரணமாக இருக்க முடியும். உண்மையில் கட்சியின் பின்னடைவுக்கு மாவை ஒரு வகையில் காரணம்தான். அதாவது, சுமந்திரன், சம்பந்தனை கட்சிக்குள் அடக்கிவைப்பதில் மாவை ஒரு தலைவராகச் செயலாற்றியிருக்கவில்லை. அந்த வகையில் மாவை கட்சியின் பின்னடைவுக்கு காரணமாகத்தான் இருந்திருக்கின்றார்.

தமிழரசுக் கட்சியின் இன்றைய நிலையென்பது உண்மையில் இப்போது ஏற்பட்ட ஒன்றல்ல. கடந்த ஐந்து வருடங்களாக தமிழரசுக் கட்சி உள்ளுக்குள் சிதைந்துகொண்டுதான் இருந்தது. ஆனால் அது இப்போதுதான் வெளியில் தெரிகின்றது. தேர்தல் முடிவுகள் அதனை அம்பலப்படுத்தியிருக்கின்றது. ஒருவேளை வழமைபோல் மக்கள் ஏதோவொரு உணர்வில் இம்முறையும் வாக்களித்திருந்தால் தாம் பலமாக இருக்கின்றோமென்னும் எண்ணத்திலேயே அனைவரும் இருந்திருப்பர். ஆனால் மக்கள் எப்போதும் அமைதியாக எல்லாவற்றையும் சகித்துக்கொண்டிருக்கமாட்டார்களென்னும் உண்மையை உணர்த்தியிருக்கின்றனர். மாவை சேனாதிராசா தோல்வியடைந்துவிட்டார் என்பதால் ஏனையவர்கள் அனைவரும் வெற்றி பெற்றுவிட்டனர் என்பது பொருளல்ல. இன்று தலைமையின் மீது குற்றம்சாட்டும் சுமந்திரனும் சிறிதரனும் கடந்த முறை பெற்ற விருப்பு வாக்குகளிலிருந்து மிகவும் மோசமாகப் பின்னுக்குச் சென்றிருக்கின்றனர். ஏன் கடந்த முறை வாக்களித்தவர்கள் இம்முறை இவர்களை நிராகரித்திருக்கின்றனர். அதற்கும் மாவை சேனாதிராசாதான் காரணமா? உண்மையில் ஒட்டுமொத்த கூட்டமைப்பும் ஒரு பெரும் பின்னடைவைச் சந்தித்திருக்கின்றது. கடந்த முறை பெற்ற வாக்குகளித்தவர்களின் அரைவாசிக்கும் அதிகமான மக்கள் அனைவரையுமே நிராகரித்திருக்கின்றனர். இதற்கான காரணங்களை ஒரு தனிநபரின் மீது சுமத்திவிட்டு ஏனையவர்கள் தப்பிக்கொள்ள முடியாது. இது வெறும் பதவிப் பிரச்சினைகளும் இல்லை. தந்தை செல்வநாயகம் தமிழரசுக் கட்சியை உருவாக்கியபோது, நாங்கள் உங்களுக்கு ஒரு அடையாளத்தை தருவோமென்று கூறியிருந்தார். அந்த அடையாளத்தைச் சிதைக்கும் பாதையில் தமிழரசுக் கட்சி பயணித்ததன் விளைவுதான் இன்றைய வீழ்ச்சிக்கான முக்கிய காரணம். வெறுமனே மக்கள் சலுகைகளை வேண்டி ஏனைய கட்சிகளுக்கு வாக்களிக்கவில்லை. சலுகைகள்தான் முக்கியமென்று மக்கள் எண்ணியிருந்தால், அதனை கடந்த காலங்களிலும் செய்திருக்கலாமே! உண்மையில் மக்களின் அடிப்படையான உணர்வுநிலைக்கு மாறாக, அவர்கள் நம்பும் கட்சி பயணிக்கும் போது, மக்கள் நம்பிக்கையிழக்கின்றனர். மக்கள் எப்போதெல்லாம் நம்பிக்கையிழக்கின்றனரோ அப்போதெல்லாம் இப்படியான சிதறல்கள் நிகழும்.

# ஓகஸ்ட் 14ஆம் திகதிக்கு முன்னர் புதிய அமைச்சரவை பதவியேற்பு

கொழும்பு, ஓக. 09

புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட வர்த்தமானி அறிவிப்பை தேர்தல் ஆணைக்குழு வெளியிட்டால், புதிய அமைச்சரவை எதிர்வரும் வெள்ளிக் கிழமைக்கு முன்னர் பதவியேற்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பதவியேற்பு திகதி, தேர்தல் ஆணைக் குழுவின் இறுதி வர்த்தமானி அறிவிப்பு வெளியிடுவதைப் பொறுத்தே தீர்மானிக் கப்படும் என்று பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர கரியவாசம் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்-

அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளபடி அமைச்சரவை அமைச்சர்களை 30 ஆகக் கட்டுப்படுத்த கட்சி விரும்புகிறது. பதவியேற்பு விழா வரலாற்று சிறப்புமிக்க மாகுல் மடுவா அல்லது கண்டியில் உள்ள றோயல் மண்டபத்தில் நடைபெற வாய்ப்புள்ளது-என்றார்.

நாட்டின் பிரதமராக பொதுஜன பெரமுனவின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ நான்காவது முறையாக இன்று பதவியேற்கிறார்.

இந்த மாதம் 20 ஆம் திகதி புதிய நாடாளுமன்றம் கூட்டப்படவுள்ளது.

# பெரமுனவின் தேசிய பட்டியலில் இருந்து நீக்கப்பட்ட சுதந்திரக் கட்சி முக்கியஸ்தர்

கொழும்பு, ஓக. 09

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர் விவரங்கள் வெளியிடப்பட்ட பின்னர் ஒரு சிக்கலான நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய பட்டியலில் இடம்பெற்றிருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் ரோஹன லக்ஷ்மன் பியதாஸ நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்படவில்லை என்பதே இதற்கு காரணம் எனக் கூறப்படுகிறது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய பட்டியலில் ரோஹன லக்ஷ்மன் பியதாஸவை நியமிப்பதாக ஆரம்பத்திலேயே இணக்கப்பாடு ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்ததாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தகவல்கள் கூறுகின்றன.

எனினும் இறுதி நேரத்தில் ரோஹன லக்ஷ்மன் பியதாஸ தேசியப் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டமை தொடர்பான விடயங்களை ஆராய சுதந்திரக் கட்சி நடவடிக்கை எடுத்துள்ளது.

# கட்சியைக் காக்க தவறிவிட்டார் ரணில்மீது கடும் விமர்சனங்கள்

கொழும்பு, ஓக. 09

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவுக்கு எதிராக அந்தக் கட்சியைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் சிலர் கடுமையான விமர்சனத்தை முன்வைத்துள்ளதாக தெரியவருகிறது.

கட்சியின் தலைவர் பதவியில் இருந்து கௌரவமாக விலகக் கிடைத்த பல வாய்ப்புகளை ரணில் விக்ரமசிங்க தவறவிட்டார் எனவும், சுமார் 50 லட்சம் ஐக்கிய தேசியக்கட்சியினர் கைவிடப்பட்ட பெரிய குற்றத்திற்கான பொறுப்பை அவரே ஏற்கவேண்டும் எனவும் அவர் கூறியுள்ளனர்.

தேர்தல் முடிவுகளின் பின்னர் ரணில் விக்ரமசிங்கவை சந்தித்துள்ள இவர்கள், இந்த விமர்சனத்தை முன்வைத்துள்ளனர்.

இரண்டாக பிளவுப்பட்டுள்ள கட்சியை மீண்டும் ஒன்றுபடுத்தி நாடாளுமன்றத்தில் குரல் எழுப்பும் சூழலை உருவாக்க உடனடியாகக் கட்சியின் செயற்குழுவைக் கூட்டுமாறும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.



இம்முறை பொதுத் தேர்தலில் அடைந்த தோல்வி எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் பெரிதாக பிரதிபலிக்கும் எனவும் அவர்கள், கட்சியின் தலைவரிடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

முன்வைக்கப்பட்ட விமர்சனங்களை அமைதியாக கேட்டுக்கொண்டிருந்த ரணில் விக்ரமசிங்க, தான் கட்சியின் செயலாளர் அகில விராஜ் காரியவசத்துடன் கலந்துரையாடி அடுத்த கட்ட நடவடிக்கையை எடுப்பதாகக் கூறியுள்ளார்.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



செய்திகள்

# 19ஆவது திருத்தச் சட்டம் நிச்சயமாக ஒழிக்கப்படும்

## சரத் வீரசேகர திட்டவட்டம்

கொழும்பு, ஒக. 09

19ஆவது திருத்தத்தை அவசியமான தருணத்தில் நீக்குவதற்கு பொதுஜன பெரமுன தயாராகவுள்ளது எனக் கொழும்பு மாவட்டத்தில் அதிக வாக்குகளை பெற்ற சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

19 ஆவது திருத்தத்தின் மூலம் உருவாக்கப்பட்ட சுயாதீன ஆணைக்குழுக்கள் காரணமாக சுயாதீன நிலைமை ஏற்பட்டுள்ளதா? இந்த ஆணைக்குழுக்கள் அரசதுறை ஊழியர்களின் நடவடிக்கைகளை முடக்கும் நடவடிக்கையை மாத்திரம் செய்துள்ளன.

இந்த ஆணைக்குழுக்களால் ஜனாதிபதியின் அதிகாரம் பறிபோயுள்ளது. 19ஆவது திருத்தத்தின் மோசமான விளைவுகளை



நாங்கள் இன்னமும் எதிர்கொள்கின்றோம், இந்த திருத்தம் நாட்டின் பல துறைகளில் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது-என்றார்.

# ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் ஏழு தேசியப் பட்டியல் எம்.பிக்கள்!

கொழும்பு, ஒக. 09

ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்றம் செல்லும், 7 பேரின் பெயர்கள் வெளியிடப்பட்டுள்ளன.

ரஞ்சித் மத்தும பண்டார, ஹரீன் பெர்னாண்டோ, இம்தியாஸ் பாக்கீர் மக்கார், திஸ்ஸ அத்தநாயக்க, இரான் விக்ரமரத்ன, மயந்த திஸா நாயக்க, தயா கமகே ஆகியோர் தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்றம் செல்ல உள்ளனர் என ஐக்கிய மக்கள் சக்தி உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

# தேர்தலில் வீணாகிய 744 ,373 வாக்குகள்!

கொழும்பு, ஒக.09

கடந்த புதன்கிழமை நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் பதிவான சுமார் 7 இலட்சத்து 44 ஆயிரத்து 373 வாக்குகள் நிராகரிக்கப் பட்டவையாக உள்ளன.

கடந்த நவம்பரில் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் 140,000 க்கும் குறைவான வாக்குகளே நிராகரிக்கப்பட்ட நிலையில் பொதுத் தேர்தலில் இது பல மடங்காக அதிகரித்துள்ளது.

தேர்தல் ஆணையம் வெளியிட்ட இறுதித் தேர்தல் முடிவுகளின்படி அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் 75.89 வீதமாக உள்ளது. இதில் 4.58 வீத வாக்குகள் நிராகரிக்கப் பட்டவையாக உள்ளன.

இது கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வெறும் 0.85மூ வீதமாகவே பதிவாகியிருந்தது.

நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலில் பதிவு செய்யப்பட்ட 16,263,885 வாக்காளர்களில், 12,343,309 பேர் வாக்களித்தனர். இதில் 11,598,936 வாக்குகள் செல்லுபடியானவையாகப் பதிவாகியுள்ளன.

# ஞானசாரரும் சபைக்கு?



கொழும்பு, ஒக. 09

பொதுபலசேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தேசியப் பட்டியலின் ஊடாக நாடாளுமன்றத்துக்கு செல்லவுள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

நடைபெற்று முடிந்த பொதுத்தேர்தலில் கொடி சின்னத்தில் போட்டியிட்ட எங்கள் மக்கள் கட்சி, தேசியப் பட்டியலில் ஒரு இடத்தைப் பெற்றுள்ளது.

அந்தக் கட்சியின் தேசியப் பட்டியலின் ஊடாகவே இம்முறை கலகொட அத்தே ஞானசார தேரர் நாடாளுமன்றம் செல்வாரென அந்தக் கட்சியின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# தேர்தல் சட்ட மீறல் குறித்து 8683 முறைப்பாடுகள்

கொழும்பு, ஒக 09

தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் இதுவரை 8683 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும் ஒரு வன்செயல் கூட இதுவரை பதிவாகவில்லை எனத் தேர்தல் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

# வெலிக்கடைச் சிறை சுவருக்கு மேல் 15 அடி உயரத்தில் புதிய தடுப்பு வேலி

கொழும்பு, ஒக. 09

வெலிக்கடைச்சிறைச்சாலையின் சுவருக்கு மேல் 15 அடி உயரத்தில் புதிய தடுப்பு வேலி அமைப்பதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக சிறை ஆணையாளர் சந்தன ஏக நாயக்க குறிப்பிடுகையில்,

வெலிக்கடைச்சிறைச்சாலையின் பெண்கள் பிரிவில் சட்ட விரோத மருந்துகள் மற்றும் போதைப்பொருள் உள்ளிட்டவைகள் தொடர்ந்து மீட்கப் படுகின்றன.

எனவே இந்தக் குற்றச் செயற்பாடுகளைத் தடுக்கவே வெலிக்கடைச் சிறைச்சாலையின் சுவருக்கு மேல் புதிய 15 அடி உயரப் பாதுகாப்பு வேலி அமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன - என்றார்.

# தேர்தல் நடந்த இடங்களில் தொற்று நீக்கல் நடவடிக்கை

கொழும்பு, ஒக. 09

பொதுத்தேர்தல் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்ட அனைத்து பகுதிகளிலும் தொற்று நீக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, பாடசாலைகள், அரச திணைக் களங்கள் உட்பட வாக்களிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட அனைத்துப் பகுதிகளிலும் தொற்று நீக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரிகள் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தலைமையில் முப்படையினரின் ஒத்துழைப்புடன் தொற்று நீக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மக்களால் நிராகரிக்கப்பட்டோருக்கு தேசியப் பட்டியலில் இடமளிக்காதீர்!

## அரசியல் கட்சிகளிடம் பவ்ரல் கோரிக்கை

கொழும்பு, ஒக. 09

தேர்தலில் போட்டியிட்டு தோல்வியுற்ற எவரையும் தேசியப் பட்டியலில் பாராளுமன்றத்துக்கு நியமிக்கக்கூடாது. மக்களால் நிராகரிக்கப்பட்டவர்களை அவ்வாறு நியமிப்பது மக்கள் ஆணைக்கு விரோதமானதாகும் என பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாரச்சி விடுத்துள்ள அறிக்கையொன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு: -

நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் மக்களின் பெரும்பான்மையோரின் விருப்பு வாக்குகளால் மக்கள் பிரதிநிதிகளாக ஒரு சில பிரிவினர் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர். ஒரு சில மாவட்டங்களில் பிரபல வேட்பாளர்கள் பலர் தோல்வியடைந்திருக்கின்றனர். இவர்கள் தொடர்பில் மக்களின் விரும்பமின்மை இதன் மூலம் தெளிவாகின்றது.

பாராளுமன்றத்துக்கு பொருத்தமில்லாதவர்கள் என மக்களால் நிராகரிக்கப்பட்டவர்களுக்கு தேசியப் பட்டியலில் சந்தர்ப்பம் வழங்குவது, இந்த நாட்டு அரசியலில் காணக்கூடியதாக இருக்கும் சம்பிரதாயமாகும். இது முற்றாக ஜனநாயக விரோதச் செயலாகும்.

மக்கள் ஆணை கிடைக்கப் பெற்ற வேட்பாளர்களுக்கு மத்தியில் மக்களால் நிராகரிக்கப்பட்டவர்களைத் தேசிய பட்டியல் மூலம் மீண்டும் நியமிக்கும் அரசியல் கட்சிகள் மற்றும் தலைவர்கள் மக்களின் கோபத்துக்கு ஆளாகுவார்கள். அத்துடன் மக்களால் நிராகரிக்கப்பட்டவர்களை அவ்வாறு நியமிப்பது மக்கள் ஆணைக்கும் விரோதமானதாகும்- என்றுள்ளது.

# மக்கள் எதிர்ப்பார்க்கும் தரப்பிடம் ஐ.தே.கவை ஒப்படைக்கவேண்டும்

## நளின் பண்டார ரணிலிடம் கோரிக்கை

கொழும்பு, ஒக. 09

மக்கள் எதிர்ப்பார்க்கும் தரப்புக்கு கட்சியை ஒப்படையுங்கள் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார வலியுறுத்தியுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அவர், வஜிர அபேவர்த்தன ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்தில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டிய அவசியமில்லை என்று கூறியுள்ளார்.

அதாவது, அவர்கள் இன்னமும் தங்களில் பிழைகளைத் திருத்திக் கொள்ள முற்படுகிறார்கள் இல்லை என்றே தெரிகிறது.

ஐக்கிய தேசியக் கட்சி இன்று அழிவடைந்துள்ளது என்பதை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. இந்த நிலையில் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட இந்த தரப்பிடம் நாம் மீண்டும் ஒன்றை வலியுறுத்துகிறோம்.

அதாவது, இனியேனும் மக்களின் ஆணைக்கு செவிசாய்த்து அவர்கள் வழங்கிய ஆணைக்கு இணங்க, புதிய மாற்றங்களை ஏற்படுத்துங்கள்.

மக்கள் எதிர்ப்பார்க்கும் தரப்பிடம் கட்சியை ஒப்படையுங்கள். இப்போதைய நிலைமையில் மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தலைவராக சஜித் பிரேமதாஸ காணப்படுகிறார்.

இதனைப் புரிந்து கொண்டு ஐக்கிய தேசியக் கட்சியை இவரிடம் ஒப்படையுங்கள். ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் என்ற ரீதியில் கட்சிக்கு இன்று ஏற்பட்டுள்ள நிலைமையை எம்மால் பொறுத்துக் கொள்ள முடியாதுள்ளது- என்றார்.

# தமிழருக்கான தீர்வை விரைந்து பெறுவோம்

## செல்வம் அடைக்கலநாதன் தெரிவிப்பு

மன்னார், ஓக.. 08

தமிழ் மக்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளை நேரடியாக ஆராய்ந்து உரிய தீர்வை பெற்றுக்கொடுக்க விரைந்து செயற்படுவோமென முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

முடிவடைந்துள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்த மன்னாரிலுள்ள மக்கள் அனைவருக்கும், செல்வம் அடைக்கலநாதன் நேரடியாகச் சென்று நன்றிகளை தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து மக்கள் மத்தியில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர்மேலும்தெரிவிக்கையில்-



தேர்தல் காலங்களில் மட்டுமே மக்களைத் தேடி வருகின்றார்கள். அதன்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வருவது இல்லை என மக்கள் தெரிவிக்கின்றனர்.

அவ்வாறான ஒரு நிலைமை இனியொருபோதும் ஏற்படாது. தமிழீழ விடுதலை இயக்கம் ரெலோ கட்சி சார்பில் எங்கள் பணியாளர்கள் ஒவ்வொரு கிராமங்களிலும் இருப்பார்கள்.

அவர்கள் ஊடாகவும் எமது வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும்.குறிப்பாக முசலிப் பிரதேசத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இம்முறை கூடிய வாக்குகள் கிடைத்துள்ளன.

அந்தவகையில் முசலி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மக்களுக்கும் எமது நன்றிகள். நாங்கள் மக்களைத் தேடி வந்து பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுப்போம்.

ஒவ்வொரு கிராமங்களுக்கும் சென்று மக்களின் பிரச்னைகளை கேட்டறிந்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.

மக்கள் எங்களை விமர்சிக்காத வகையில் எமது வேலைத் திட்டங்கள் அமையும்-என்றார்.

# சரியான தீர்மானத்தைத்தான் தேர்தலில் மக்கள் எடுத்தனர்




கொழும்பு, ஓக. 09

நிறைவடைந்த பொதுத்தேர்தலில் மக்கள் சரியான தீர்மானத்தைதான் வழங்கியுள்ளார்களென ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

நிறைவடைந்த பொதுத்தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு அதிகளவான மக்களின் ஆணை கிடைக்கப் பெற்றுள்ளது.

இந்தத் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி பெரும் தோல்வியைச் சந்தித்துள்ளது.

அதாவது இந்தத் தேர்தலில் கட்சி பின்னடைவை சந்தித்தமையினால் ஏற்பட்ட குறைபாடுகள் என்பவற்றின் பொறுப்பை ஏற்றுக்கொள்கின்றேன் - என்றார்.

நிறைவடைந்த பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி, அனைத்து தேர்தல் தொகுதிகளிலும் தோல்வியடைந்தமையினால் ஒரு ஆசனத்தை கூட கைப்பற்றிக்கொள்ள முடியவில்லை.

இதனால் தேசியப்பட்டியலின் ஊடாக ஒரேயொரு ஆசனத்தை மாத்திரம் ஐ.தே.க. பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கது.







# மைத்திரி, பீரிஸ், நிமலுக்கு அமைச்சரவையில் இடம்

கொழும்பு, ஓக. 09

புதிய அரசின் அமைச்சரவை எதிர்வரும் 14ஆம் திகதி பதவியேற்கவுள்ளது.

அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் அமைச்சரவையின் எண்ணிக்கை 30 ஆக இருக்கின்ற போதிலும் 26 பேருக்கு மாத்திரமே அமைச்சுப்பதவிகள் வழங்கப்படவுள்ளன எனவும் தெரியவருகின்றது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நிமல் சிறிபாலடி சில்வா, ஜீ.எஸ். பீரிஸ் ஆகியோருக்கும் அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவுள்ளன.

# மக்கள் ஆணைக்கு மதிப்பளிப்பேன்!

## மஸ்தான் தெரிவிப்பு

வவுனியா, ஓக. 06

நடைபெற்ற பொதுத்தேர்தலில் எனக்கும் பொதுஜன பெரமுன கட்சிக்கும் நம்பிக்கையோடு வாக்களித்த வன்னி மாவட்ட மக்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். அத்துடன் எனக்கு வாக்களித்த மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதையே எனது குறிக்கோளாய் கொண்டிருக்கிறேன் என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டுள்ள காதர் மஸ்தான் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்-

கடந்த காலங்களில் நாம் இதய சுத்தியுடன் மேற்கொண்ட பணிகள், சேவைகள், மற்றும் அபிவிருத்திகள் என்பவற்றுக்கு மக்கள் அளித்த அங்கீகாரமாக எனது இந்த வெற்றியை நான் நோக்கியபோதும் இந்த வெற்றியை அடைவதற்கு கடுமையாக உழைத்த எனது ஆதரவாளர்களையும் அன்பர்களையும் அவர்கள் செய்த தியாகங்களையும் இந்தக் களிப்பான சந்தர்ப்பத்தில் நினைத்துப் பார்க்கின்றேன்.

பல்வேறு வகையான போட்டிகள், சதிகள், கழுத்தறுப்புக்கள், குழிபறிப்புக்களுக்கு நடுவில் இந்த வெற்றி பெறப்பட்டிருப்பதை எனது ஆதரவாளர்களான நீங்கள் என்றும் மறந்து விடலாகாது.

இவ்வாறான கசப்பான உண்மைகள் மூலம் நாங்கள் புடம் போடப்பட்டிருப்பதுடன் இந்த அனுபவங்கள் மூலம் மேலும் பல அனுபவங்களை நாங்கள் கற்றறிந்திருக்கும் அதேவேளை எமது மக்களின் அபிலாஷைகளுக்கு மதிப்பளித்து அவர்களது தேவைகளை உணர்ந்து சேவையாற்ற நான் உறுதி பூண்டிருக்கிறேன்.

எனவே எனது வன்னி மாவட்ட மக்களுக்கு அவர்களது தொழில்வாய்ப்பு, வாழ்வாதார பிரச்சினைகள் உள்ளிட்ட பல்வேறுபட்ட பணிகளை பொருளாதார ரீதியாக பின்தங்கிய மக்கள் மத்தியிலிருந்து முன்னெடுப்பதற்கு திட்டமிட்டிருப்பதுடன் எமது வன்னி மாவட்டத் தில் வறுமையை இல்லாதொழிப்பதற்கு என்னால் முடிந்தளவு செயற்படவும், பாடுபடவும் தீர்மானித்துள்ளேன்-என்றார்.

# பாடசாலைகள் திங்கள் ஆரம்பம்

கொழும்பு, ஓக. 09

பொதுத் தேர்தல் நிறைவடைந்துள்ள நிலையில் நாளை திங்கட்கிழமை முதல் நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்துப் பாடசாலைகளையும் முழுமையாக ஆரம்பிக்கக் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதன்போது 200 இற்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய பாடசாலைகளைக் கட்டம் கட்டமாக ஆரம்பிக்கத் தீர்மானித்துள்ளதாக கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளர் ரஞ்சித் சந்திரசேகர தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்-

200 இற்கும் மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளில் ஒரு மீற்றர் இடைவெளியைப் பேண முடியுமானால் அனைத்து மாணவர்களையும் அழைக்க முடியும்.

200 ஐ விட அதிக மாணவர்கள் காணப்படுகின்ற பாடசாலைகளில் கட்டம் கட்டமாக மாணவர்களை வரவழைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய 200 ஐ விட அதிக மாணவர்களைக் கொண்டு பாடசாலைகளில் -

திங்கட்கிழமை - தரம் 1, 2 வகுப்புக்கள்

செவ்வாய்கிழமை - தரம் 2 , 5 வகுப்புக்கள்

புதன்கிழமை - தரம் 3 , 5 வகுப்புக்கள்

வியாழக்கிழமை ,வெள்ளிக்கிழமை - தரம் 4 , 5 வகுப்புக்கள் என்ற ரீதியில் ஆரம்பமாகவுள்ளன.

வழமையான நேரத்துக்குப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்படும். அதில் மாற்றங்கள் செய்யப்படவில்லை.

**ஏனைய வகுப்புக்கள்**

திங்கட்கிழமை -தரம் 6 , 10 , 11 , 12 மற்றும் 13 ஆம் வகுப்புக்கள்

செவ்வாய்கிழமை - தரம் 7 , 10 , 11 , 12 மற்றும் 13 ஆம் வகுப்புக்கள்

புதன்கிழமை - தரம் 8 , 10 , 11 , 12 மற்றும் 13 ஆம் வகுப்புக்கள்

வியாழக்கிழமை , வெள்ளிக்கிழமை - தரம் 9 , 10 , 11 , 12 மற்றும் 13 வகுப்புக்கள் என்ற ரீதியில் கற்றல் செயற்பாடுகள் ஆரம்பமாகவுள்ளன.

பாடசாலை நிறைவடையும் நேரத்தில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. தரம் 6 , 7 , 8 , 9 காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் 1.30 மணிக்கு நிறைவடையும். தரம் - 10 , 11, 12 மற்றும் 13 ஆம் வகுப்புக்களுக்கு காலை 7.30 மணி தொடக்கம் மாலை 3.30 மணி வரை கற்பித்தல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

**ஆசிரியர்கள்**

திங்கட்கிழமை முதல் அனைத்து ஆசிரியர்களும் வழமையைப் போன்று பாடசாலைக்கு வருகை தர வேண்டும். மாலை 3.30 மணிக்கு முன்னர் பாடசாலை நிறைவடையும் வகுப்பாசிரியர்கள் 1.30 மணிக்கு பாடசாலையிலிருந்து செல்ல முடியும் - என்றார்.

# ஐ.தே.கவை மறுசீரமைத்து முன்நோக்கிச் செல்வோம்



கொழும்பு, ஓக. 09

ஐக்கிய தேசியக் கட்சியை மறுசீரமைத்து முன்னோக்கிச் செல்லத் தீர்மானித்துள்ளோம் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தயா கமகே தெரிவித்துள்ளார்.

பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி படுதோல்வியைச் சந்தித்ததை அடுத்து, நேற்று முன் தினம் அந்தக் கட்சியின் முக்கியஸ்தர்களுக்கிடையே விசேட கூட்டமொன்று சிறிகொத்தவில் இடம்பெற்றது.

இதன்நிறைவில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஐக்கிய தேசியக் கட்சியை மறுசீரமைத்து முன்னோக்கி செல்லத் தீர்மானித்துள்ளோம். இந்தத் தேர்தலில் நாம் பாரிய தோல்வியைச் சந்தித்துள்ளோம்.

ஜனாதிபதியிடமே அரசு இருக்கவேண்டும் என மக்கள் நினைத்துள்ளதால் கூட இந்தத் தோல்வி எமக்கு கிடைத்திருக்கலாம்.

இன்னொரு பக்கத்தில் எமது கட்சியின் பிளவையும் நாம் எடுத்துக்கொள்ளலாம். சஜித் பிரேமதாஸ எமது கட்சியிலிருந்து பிரிந்து சென்று, எமது கட்சியை அழித்ததோடு, அவர் சார்ந்த கட்சியையும் அழித்துள்ளார்.

இவை தான் தோல்விக்குக் காரணம் என நாம் நினைக்கிறோம்-என்றார்.



# சிறிகொத்தவை தந்துவிடுங்கள்!

## வடிவேல் சுரேஷ் கர்ச்சிப்பு

கொழும்பு, ஒக. 09

“ஸ்ரீகொத்தவை ஐக்கிய மக்கள் சக்தியிடம் ஒப்படைக்க வேண்டும். அத்துடன் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தையும் எமது பொறுப்பில் விடவேண்டும். தவறின் ஜனநாயக ரீதியிலான பாரிய எதிர் விளைவுகளை ரணில் விக்கிரமசிங்கவும், அவரது குழுவினரும் அனுபவிக்க நேரிடும்.” - என்று வடிவேல் சுரேஸ் தெரிவித்தார்.

அவரது இல்லத்தில் நடைபெற்ற ஆதரவாளர்கள் சந்திப்பின்போதே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் மேலும் கூறுகையில்-

எனதும், அண்ணன் அரவிந்தகுமாரின் வெற்றிகளைத் தடுப்பதற்கு பல்வேறு வகையில் மேலினவாதிகளை விட எம்மவர்களே பாரிய பிரயத்தனங்களை மேற்கொண்டிருந்தனர். ஒப்பந்த அடிப்படையில் சுயேச்சைக் குழுக்களை பேரினவாதிகள் களம் இறக்கியிருந்தனர்.

குறிப்பாக எம்மிருவரது வெற்றியைத் தடுப்பதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், அந்த முயற்சிகள் அனைத்தையும் எனது தொப்புள் கொண்டி உறவுகள் முறியடித்து, எம்மிருவரையும் முதல் நிலையிலேயே, வெற்றியடைய வைத்தனர். அத்துடன், எமக்கு எதிராக செயற்பட்ட அனைவரையும் மண் கவ்வச் செய்தார்கள்.

எமது வெற்றியைத் தடுப்பதற்கு செயற்பட்ட சுயேச்சைக் குழுக்களுக்கு தகுந்த பாடத்தினை எமது உறவுகள் புகட்டிவிட்டனர். அந்தக் குழுக்கள் ஏற்பட்ட பாரிய பின்னடைவிலிருந்து அவர்களினால் மீளவே முடியாது. அந்தளவில் எமது மக்களின் செயற்பாடுகள் அமைந்துவிட்டன.

எமது நாட்டின் பிரதான தேசியக் கட்சியொன்றில் சிறுபான்மையினத்தாரின் பெறுமதி மிக்க வாக்குகளினால் முதல் நிலையில் தமிழர்கள் இருவருமே வெற்றி பெற, எம்மக்கள் பூரண பங்களிப்புக்களை வழங்கினர்.

நான் 49 ஆயிரத்து எழுநுற்று அறுபத்தி இரண்டு வாக்குகளைப் பெற்று முதல் நிலையில் வெற்றி பெற்றதுடன் எனக்கு அடுத்தபடியாக 45 ஆயிரத்து நானூற்று தொன்னூற்று ஒரு வாக்குகளை, அண்ணன் அரவிந்தகுமாரும் பெற்றுள்ளார். இதனை எம்மால் என்றுமே மறக்க முடியாது.

அத்துடன் ரணில் விக்கிரமசிங்கவின் கட்சியையும் நாட்டு மக்கள் அனைவருமே, புறக்கணித்து விட்டனர். இதற்கு பின்பும் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அவரது குழுவினரால், எம்மை ஆட்டிப் படைக்க முடியாது.

ஸ்ரீகொத்தவை ஐக்கிய மக்கள் சக்தியிடம் ஒப்படைக்க வேண்டும். அத்துடன் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தையும் எமது பொறுப்பில் விட வேண்டும். தவறின் ஜனநாயக ரீதியிலான பாரிய எதிர் விளைவுகளை ரணில் விக்கிரமசிங்கவுவும், அவரது குழுவினரும் அனுபவிக்க நேரிடும்- என்றார்.

# திருமலையில் குடும்பஸ்தர் வாளால் வெட்டிக் கொலை!

திருகோணமலை, பூவரசந் தீவுப் பகுதியில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் வாளால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் இரண்டு சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கிண்ணியா, பூவரசம்பூ பகுதியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான அப்துல் மனாப் மொஹமட் சப்பான் (வயது 25) என்பவரே படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

பாடசாலையொன்றில் திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்ட ஒருவரைக் காட்டிக் கொடுத்ததமைக்குப் பழிவாங்கும் நோக்கில் இவர் தாக்கப்பட்டுள்ளார்.

படுகாயங்களுடன் கிண்ணியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட இவர் அன்கு உயிரிழந்துள்ளார்.

இந்தப் படுகொலை தொடர்பில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

# இரு நிபந்தனைகளை பூர்த்தி செய்தாலே பிரேமலால் நாடாளுமன்றம் செல்லலாம்

கொழும்பு, ஒக. 09

இரத்னபுரி மாவட்டத்தில் இருந்து நாடாளுமன்றத்துக்கு தெரிவான பிரேமலால் ஜெயசேகர, பாராளுமன்ற கூட்டங்களில் கலந்து கொள்ள இரண்டு நிபந்தனைகளை பூர்த்தி செய்ய வேண்டும் என்று நாடாளுமன்ற துணைப் பொதுச் செயலாளர் நீல் இத்தவெல தெரிவித்துள்ளார்.

முதலாவதாக, அவர் இரத்தினபுரி மாவட்டத்தில் இருந்து தெரிவானார் என்பதை வர்த்தமானி அறிவித்தலின் மூலம் தேர்தல் ஆணையாளர் அறிவிக்கவேண்டும்.

இரண்டாவதாக, வர்த்தமானி அறிவிப்பின் அடிப்படையில், ஒரு அமர்வில் கலந்துகொள்ள பிரேமலால் ஜெயசேகர நீதிமன்றத்தில் ஒப்புதல் பெற வேண்டும்.

இந்த இரண்டு நிபந்தனைகளையும் பூர்த்தி செய்யத் தவறினால் பிரேமலால் ஜெயசேகர அமர்வுகளில் கலந்து கொள்ள முடியாது என்று குறிப்பிட்டார்.

2015 ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் ஒரு நபர் கொலை செய்யப்பட்ட வழக்கில் பிரேமலால் ஜெயசேகர மற்றும் இரண்டு பேருக்கு இரத்னபுரி உயர் நீதிமன்றம் சமீபத்தில் மரண தண்டனை விதித்தது.

இது தொடர்பாக அவர் மேன்முறையீடு செய்தார்.

நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் 104,237 விருப்பு வாக்குகளை அவர் பெற்றார்.

# சசிகலாவுக்கு சட்ட உதவி இலவசமாக வழங்க தயார்

## சிவாஜிலிங்கம் அறிவிப்பு

கொழும்பு, ஒக. 09

பொதுத்தேர்தல் முடிவுகளினால், பாதிக்கப்பட்டார் எனத் தெரிவிக்கப்படும் சசிகலா ரவிராஜூக்கு, தேவையேற்படின் சட்ட உதவிகளைப் பணமின்றி செய்துத் தர தமது தரப்பினர் தயாராக உள்ளனர் என தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் உறுப்பினர் எம். கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சசிகலா ரவிராஜ் விரும்பினால் அவருக்கு தேவையான அனைத்து சட்ட உதவிகளையும் செய்வதற்கு நாங்கள் தயாராக உள்ளோம்.

தேர்தல் ஆட்சேபனை மனுவாக இருக்கலாம். எதுவாக இருந்தாலும் அவரது குடும்பத்தினரின் ஒருசதம் பணம் செலவின்றி பொதுமக்களே அந்த விடயங்களை பொறுப்பேற்று பல சட்டத்தரணிகள் இலவசமாக வாதாடக்கூடிய நிலைமையை எம்மால் உருவாக்க முடியும்.

இலங்கையில் வன்முறைக்கு எதிரான கண்காணிப்பு நிலையத்தின் பிரதிநிதிகளிடம் முறையிட்டுள்ளோம்.

அவர்களும் சம்பவத்தினத்தன்று அங்கு வந்திருந்ததுடன் எனது வாக்குமூலத்தையும் பதிவு செய்துள்ளனர்.

எனவே அவர்களிடம் வேண்டுகோள் விடுத்து இருக்கின்றேன். நீங்களும் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை மனுவொன்றை தாக்கல் செய்வது தான் நல்ல விடயம் என்று கூறியுள்ளேன்.

சசிகலா ரவிராஜூம் இவ்விடயம் தொடர்பாக மனு கையளிப்பாராயின் அதனுடன் சேர்த்து 5 மனுக்களை உயர்நீதிமன்றம் விசாரணைக்கு உட்படுத்தும்.

எதிர்காலத்திலாவது இவ்வாறான ஜனநாயக மீறல்கள் மற்றும் அடக்குமுறைகள் இடம்பெறாமல் இருக்கவேண்டுமாயின் இந்த விடயத்துக்கு உரிய தீர்வு முன்வைக்கப்பட வேண்டும்-என்றார்.



# சபாநாயகராக மீண்டும் சமல்?

கொழும்பு, ஒக.09

எதிர்வரும் 20 ஆம் திகதி ஆரம்பமாகும் 9ஆவது நாடாளுமன்றத்தின் புதிய சபாநாயகராக சமல் ராஜபக்ஷ தெரிவு செய்யப்படலாம் என அரசியல்தரப்புத் தகவல்கள் தெரிவிக் கின்றன.

அத்துடன் சபை முதல்வராக தினேஷ் குணவர்தன நியமிக்கப்பட உள்ளதுடன் ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளராக ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ நியமிக்கப்பட உள்ளார் எனக் கூறப்படுகின்றது.

எதிர்க்கட்சித் தலைவராக சஜித் பிரேமதாஸ தெரிவு செய்யப்படுவார்.

அதேவேளை, எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளராக கயந்த கருணாதிலக்க நியமிக்கப்பட உள்ளார் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சமல் ராஜபக்ஷ கடந்த மஹிந்த அரசில் சபாநாயகராக பதவி வகித்தார். அத்துடன் தினேஷ் குணவர்தன, சபை முதல்வராக பதவி வகித்தார்.

கயந்த கருணாதிலக்க நல்லாட்சி அரசில் சபை முதல்வராக பதவி வகித்துள்ளார்.

# தலைவர் பதவியை சஜித்துக்கு வழங்கினால் ஐ.தே.கவை மீண்டும் கட்டியெழுப்பத் தயார்!

## அசோக அபேசிங்க அறிவிப்பு



கொழும்பு, ஒக 09

ஐக்கிய தேசியக் கட்சியில் எஞ்சியிருக்கும் தலைவர்கள் மற்றும் கட்சியினர் அழைப்பு விடுத்தால், கட்சியைப் பொறுப்பேற்கத் தமது அணியினர் தயாராக இருப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் குருநாகல் மாவட்டத்தில் இருந்து நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள அசோக அபேசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியினை மீண்டும் பொறுபேற்க வேண்டுமாயின் அந்தக் கட்சியின் தலைமைத்துவம் சில நிபந்தனைகளை நிறைவேற்றவேண்டும். முழுமையான அதிகாரங்களுடன் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக சஜித் பிரேமதாஸ நியமிக்கப்பட வேண்டும் என்பது அந்த நிபந்தனைகளில் முதன்மையானது எனவும் அசோக அபேசிங்க குறிப்பிட் டார்.

சஜித் பிரேமதாஸ தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து வெளியேறி ஐக்கிய மக்கள் சக்தியை உருவாக்கிவர்கள், தாம் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து விலகவில்லை என்றே தொடர்ந்தும் கூறி வந்தனர். அத்துடன் பொதுத் தேர்தலின் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் அதிகாரத்தை கைப்பற்றப் போவதாகவும் அவர்கள் குறிப்பிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 188,795 வாக்குகளை இழந்த கூட்டமைப்பு

யாழ்ப்பாணம், ஒக. 09

2015 ஆம் ஆண்டு பாராளு மன்றத் தேர்தலுடன் ஒப்பிடுகை யில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற தேர்தலில் சுமார் 1 இலட்சத்து 88 ஆயிரத்து 795 வாக்குகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இழந்துள்ளது.

2015 பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 5 இலட்சத்து 15 ஆயிரத்து 963 வாக்குகளைப் பெற்றிருந்தது. இது பதிவான செல்லுபடியான மொத்த வாக்குகளில் 4.62 வீதமாகும்.

2015 தேர்தலில் 14 ஆசனங் களை வென்ற கூட்டமைப்பு 2 தேசியப் பட்டியல் ஆசனங் களுடன் 16 பேரை பாராளு மன்றத்துக்கு அனுப்பியது.

எனினும் கடந்த புதன் கிழமை நடைபெற்ற தேர்தலில் தமிழ்க் கூட்டமைப்பு 327,168 வாக்குகளையே பெற்றுக் கொண்டது. இது பொதுத் தேர்தலில் அளிக்கப்பட்ட செல்லுபடியான வாக்குகளில் 2.82 வீதமாகும்.

இதன்மூலம் கடந்த தேர்த லில் 2 தேசியப் பட்டியல்களு டன் 16 ஆசனங்களைப் பெற்றுக்கொண்ட கூட்ட மைப்பு இந்தத் தேர்தலில் ஒரு தேசியப் பட்டியலுடன் 10 ஆசனங்களையே பெற்றுள் ளது.

# நாமல் ராஜபக்ஷ வசமாகிறது இளைஞர் விவகார அமைச்சு!

## 14 ஆம் திகதியன்று பதவியேற்பு

கொழும்பு, ஒக. 09

இளைஞர் விவகார மற்றும் தொழில்பயிற்சி அமைச்சராக நாமல் ராஜபக்ஷ நியமிக்கப்பட வுள்ளார் என அரசியல் வட்டா ரங்களில் இருந்து அறியமுடி கின்றது.

புதிய அரசின் அமைச்சரவை எதிர்வரும் 14 ஆம் திகதி கண்டி தலதாமாளிகையிலுள்ள பாரம் பரிய மண்டபத்தில் பதவி யேற்கவுள்ளது.

இதன்போதே நாமல் ராஜ பக்ஷவும் அமைச்சராக பதவி யேற்கவுள்ளார். 2010, 2015 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற தேர்தல்களில் நாமல் ராஜபக்ஷ வெற்றி பெற்றிருந்தாலும் அவருக்கு எவ்வித பதவிகளும் வழங்கப் படவில்லை.



இவ்வாறானதொரு பின் புலத்திலேயே இம்முறை அவர் அமைச்சரவைக்கு உள்வாங்கப் பட்டுள்ளார்.

# ரவிராஜின் சிலைக்கு முன் கவனவீர்ப்பு போராட்டம்

யாழ்ப்பாணம், ஒக. 09

மாமனிதர் நடராசா ரவிராஜின் மனைவிக்கு நீதி கோரிய அமைதி வழி கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று சாவகச்சேரியில் இடம்பெற்றது.

சாவகச்சேரி நகரில் அமைந்துள்ள ரவிராஜின் சிலை முன்பாக அவரது ஆதரவாளர்கள் திருமதி சசிகலாவுக்கு நீதி கோரி இந்தக் கவன வீர்ப்பை மேற்கொண் டனர்.

நடைபெற்று முடிந்த தேர்தலில் கூட்ட மைப்பின் சார்பில் போட்டியிட்ட திருமதி சகசிகலாவுக்கு ஜனநாயம் மறுக்கப்பட்டு அநீதி இழைக்கப்பட்டிருப்பதாகச் சுட்டிக்காட்டியுள்ள ஆதரவாளர்கள், நீதியை வலியுறுத்தி அமைதியான முறையில் கவன வீர்ப்பை முன்னெடுத்தனர்.



# முன்னணியின் தேசியப்பட்டியல் கஜேந்திரனுக்கு!




யாழ்ப்பாணம், ஒக. 09

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தேசியப் பட்டியல் ஆசனத்தை, கட்சியின் செயலாளர் செ.கஜேந்திரனுக்கு வழங்குவ தென முடிவாகியுள்ளது.

கட்சியின் மத்திய குழு நேற்று முன்தினம் இரவு மூடிய அறைக் குள் நடத்திய மந்திராலோசனையின் பின்னர் இந்த முடிவு எடுக்கப் பட்டுள்ளது.

நடைபெற்று முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் பெற்ற வாக்குகள் அடிப்படையில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சிக்கு ஒரு தேசியப் பட்டியல் ஆசனம் கிடைத்திருந்தது.

ஏற்கனவே யாழ். தேர்தல் மாவட்டத்தில் பெற்ற வாக்குகள் அடிப் படையில் ஒரு பாராளுமன்ற ஆசனத்தைப் பெற்றிருந்தது தமிழ்க் காங்கிரஸ். அதன் அடிப்படையில் கட்சி சார்பில் 31 ஆயிரத்து 658 விருப்பு வாக்குகளைப் பெற்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவாகியிருந்தார்.

இந்நிலையில் 24 ஆயிரத்து 794 விருப்பு வாக்குகளை பெற்ற செல்வராசா கஜேந்திரன், 24 ஆயிரத்து 743 விருப்பு வாக்குகளை பெற்ற விஸ்வலிங்கம் மணிவண்ணன் மற்றும் 21 ஆயிரத்து 457 விருப்பு வாக்குகளை பெற்ற கனகரட்ணம் சுகாஷ் ஆகியோர் வெற்றி வாய்ப்பை இழந்தனர்.

இதற்கிடையே தமிழ் காங்கிரசுக்கு கிடைத்த தேசியப்பட்டியல் உறுப்பினர் வாய்ப்பை கிழக்கு மாகாணத்திற்கும் வன்னி பிராந்தியத் திற்கும் வழங்க வேண்டும் என அப்பகுதிகளைச் சேர்ந்த கட்சி ஆதரவாளர்களால் கோரிக்கைகள் விடுக்கப்பட்டிருந்தது.

தேசியப்பட்டியல் வாய்ப்பை வன்னி தேர்தல் மாவட்டத்தில் போட்டியிட்டு அதிக விருப்பு வாக்குகளை பெற்ற வைத்தியர் திலக நாதனுக்கு வழங்கவேண்டும் எனச் செட்டிகுளம் கால்நடை ஒன்றியத் தலைவர் பகிரங்கமாக ஊடக சந்திப்பில் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இது தொடர்பான கோரிக்கையை முன்வைப்பதற்காக கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கு பல தடவை அழைப் படுத்தபோதிலும் தொடர்பு கொள்ள முடியவில்லை என்று அவர் மேலும் தெரிவித்திருந்தார்.

இவ்வாறான பின்னணியில் பெரும் இழுபறிகள் நடைபெற்று வந்த நிலையில் கட்சி சார்பில் தேசியப்பட்டியல் உறுப்பினராகச் செயலாளர் செர்வராசா கஜேந்திரன் தெரிவு செய்யப்படுவதாக தீர்மானிகப்பட்டுள்ளதாக தமிழ்க் காங்கிரஸ் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் தமிழ் காங்கிரஸ் தரப்பில் மேலும் தெரிவிக்கை யில்,

அகில இலக்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சிக்கு (த.தே.ம.முன்னணி) கிடைத்துள்ள ஒரு தேசியப் பட்டியல் ஊடாக கட்சியின் செயலாளர் செல்வராசா கஜேந்திரனை பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன் தினம் இரவு இடம்பெற்ற பொதுக் குழுக் கூட்டத்தில் அனைத்து மாவட்டப் பிரதிநிதிகள், அமைப்பாளர்கள், மத்திய குழு உறுப்பினர்களால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

வன்னி, மட்டக்களப்பு, திருமலை, அம்பாறை மாவட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி தனது பணிகளைச் செல்வராசா கஜேந்திரன் மேற்கொள்ள வேண்டும் என்று கட்சியின் பொதுக்குழு பரிந்துரை செய்தத்துள்ளதாகவும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அறிவித்துள் ளது.

# தேர்தலில் தோல்வியுற்றோருக்கு தேசியப்பட்டியலில் இடமில்லை

## சஜித் பிரேமதாஸ திட்டவட்டம்

கொழும்பு, ஒக. 09

தேர்தலில் தோல்வியடைந்த எந்தவொரு வேட்பாளருக்கும் தேசியப்பட்டியல் ஊடாக நிய மனம் வழங்கப்படமாட்டாது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அத்துடன், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவியை பொறுப்பேற்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டால் அது தொடர்பில் பரிசீலிக்கப்படும் எனவும், சிறிகொத்தவை பலவந்தமாகக் கைப்பற்றும் எண்ணம் எதுவும் இல்லை எனவும் அவர் கூறினார்.

பொதுத்தேர்தல் முடிவு கள் வெளியான பின்னர் நேற்று சஜித் பிரேமதாஸ ஊடகங்களி டம் கருத்து வெளியிட்டார். இதன்போது தேசியப்பட்டியல்



விவகாரம் தொடர்பில் எழுப் பட்ட கேள்விக்கு பதிலளிக்கை யிலேயே அவர் மேற்கண்ட வாறு குறிப்பிட்டார்.

# மஹிந்தவை வாழ்த்தினார் இம்ரான் கான்

கொழும்பு, ஒக. 09



பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான், புதிய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்குத் தொலைபேசி மூலம் அழைத்து வாழ்த்துக்களைத் தெரிவித்துள் ளார்.

இது தொடர்பாக தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இருநாட்டு உறவை மேலும் பலப்படுத்த எதிர்பார்ப் பதாகவும் தெரிவித்தார்.

# ஐ.தே.க புதிய தலைவர் ருவான் விஜேவர்த்தன?

கொழும்பு, ஒக. 09

ஐ.தே.க தலைமையில் மாற்றத்தை ஏற்படுத்துவதில் கவனம் செலுத்தப்பட்டு வரு கின்றது.

நேற்று முன் தினம் கட்சி யின் உயர்மட்டக் கலந்துரை யாடலில் இதற்கான கவனம் செலுத்தப்பட்டது.

இந்தக் கலந்துரையாட லில் தலைமைப் பதவிக்கான பல பெயர்கள் முன்மொழியப் பட்டன.

இதில் முன்னாள் எம்.பி ருவான் விஜேவர்த்தனவின் பெயரும் உள்ளடங் குகிறது. அவரை குறிப் பிட்டளவானவர்கள் ஆதரித்துள்ளனர்.

இது தொடர்பான கலந்துரையாடல்களின் பின்னர், அடுத்த வாரமள வில் இறுதி முடிவு அறிவிக் கப்படவுள்ளது.

இந்தக் கலந்துரையாட லின்போது, கட்சியின் தலை வராகத் தொடரத் தான் விரும்பவில்லையென்பதை ரணில் வெளிப்படுத்தியுள் ளார்.

தகுதியான ஒருவரை அடையாளம் கண்டு பிரேரிக் கும்படியும், அவரிடம் பொறுப்பை ஒப்படைக்க தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஈழநாடு
வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Eelanadu

# தமிழ், முஸ்லிம் சார்பில் 47 பிரதிநிதிகள் சபைக்கு!

கொழும்பு, ஓகஸ்ட் 09

**நடைபெற்று முடிந்த பாராளுமன்றத்தேர்தலில் தமிழ், முஸ்லிம்கள் சார்பில் வாக்களிப்பு மூலம் 41 பிரதிநிதிகளும், தேசியப்பட்டியல் மூலம் 6 பிரதிநிதிகளும் தெரிவாகியுள்ளனர். தமிழர்கள் சார்பில் 28 உறுப்பினர்களும், முஸ்லிம்கள் சார்பில் 19 பிரதிநிதிகளும் இதில் அடங்குகின்றனர்.**

**யாழ். தேர்தல் மாவட்டம்**

இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் சிவ ஞானம் சிறிதரன், எம்.ஏ சுமந்திரன், தர்மலிங் கம் சித்தார்த்தன் ஆகியோரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் அங்கஜன் இராமநாதனும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி சார்பில் அதன் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவனந்தாவும், அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் சார்பில் அதன் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி விக்னேஸ்வரனும் வெற்றி பெற்றுள்ளனர்.

**வன்னி தேர்தல் மாவட்டம்**

இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் சார்ள்ஸ்நிர்மலநாதன், செல்வம் அடைக்கலநாதன், எஸ். வினோ நோகராதலிங்கம் ஆகியோரும், ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் ரிஷாட் பதியுதீனும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் காதர் மஸ்தானும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் சார்பில் குலசிங்கம் திலீபனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

**திருகோணமலை மாவட்டம்**

இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் இரா.சம்பந்தன் வெற்றி பெற்றுள்ளார். ஐக்கியமக்கள் சக்தி சார்பில் எஸ்.எம்.தௌபீக், இம்ரான் மஹ்ரூப் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

**மட்டக்களப்பு மாவட்டம்**

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின்சார்பில் பிள்ளையான் என அறியப்படும் சிவநேசத்துரை சந்திரகாந்தனும், இலங்கைத்தமிழரசுக் கட்சி சார்பில் இரா.சாணக்கியன், கோவிந்தன் கருணாகரம் ஆகியோரும், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி சார்பில்சதாசிவம் வியாழேந்திரனும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் ஹாபீஸ் நஸீர் அஹமட்டும் வெற்றிபெற்றுள்ளனர்.

**அம்பாறை மாவட்டம்**

ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் எம்.எச்.எம்ஹரீஸ், பைஸல் காசீம் ஆகியோரும், தேசிய காங்கிரஸ் சார்பில் ஏ. எல். எம். அதாவுல்லாவும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில் மொஹமட் முஸாரப்பும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

**கண்டி மாவட்டம்**

ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் ரவூப் ஹக்கீம், அப்துல் ஹலீம், எம். வேலுகுமார் ஆகியோர்வெற்றி பெற்றுள்ளனர்.

**நுவரெலியா மாவட்டம்**

ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் பழனி திகாம்பரம், வேலுசாமி இராதாகிருஷ்ணன், மயில்வாகனம் உதயகுமார் ஆகியோரும், ஸ்ரீலங்காபொதுஜன முன்னணி சார்பில் ஜீவன் தொண்டமான், மருதபாண்டி ராமேஸ்வரன் ஆகியோ ரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

**பதுளை மாவட்டம்**

ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் வடிவேல்சுரேஷ், அ.அரவிந்தகுமார் ஆகியோர் வெற்றி பெற்றுள்ளனர்.

**கேகாலை மாவட்டம்**

ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் கபீர் ஹாசீம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

**அநுராதபுரம் மாவட்டம்**

ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் இசாக் ரஹ்மான் வெற்றி பெற்றுள்ளார்.

**கொழும்பு மாவட்டம்**

ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் எஸ்.எம் மரிக்கார், முஜிபுர் ரஹ்மான, மனோ கணேசன்ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

**புத்தளம் மாவட்டம்**

முஸ்லிம் தேசியக் கூட்டணி சார்பில் அப் துல் அலி சப்ரின் வெற்றி பெற்றுள்ளார்.

**தேசியப் பட்டியல்**

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி சார்பில்நான்கு சிறுபான்மையின பிரதிநிதிகளுக்கு

தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்புரிமை வழங்கப்பட்டுள்ளது.

கலாநிதி சுரேன் ராகவன், ஜனாதிபதி சட்டத்தரணி மொஹமட் அலி சப்ரி, மொஹமட் முஸம்மில், வர்த்தகர் மொஹமட் பலீல் மர்ஜான் ஆகியோருக்கு தேசியப் பட்டியல் உறுப்புரிமை கிடைத்துள்ளது.

இதேவேளை, இலங்கைத் தமிழரசுக் கட்சி, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் என்பவற்றுக்கு தலா ஓர் தேசியப் பட்டியல் ஆசனங்கள் கிடைத்துள்ளன.

## தேர்தலுக்குப் பின் அமைதி

கொழும்பு, ஓக. 09

தேர்தலுக்கு பின்னரும் நாட்டில் சுமுகமான நிலை தொடர்வதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுவரை எவ்வித வன்முறைச் சம்பவங்களும் பதிவாகவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

அனைத்து பொலிஸ் பிரிவுகளிலும் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸ் நடமாடும் சேவைகளும் தொடர்ந்தும் கடமையில் உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

## வன்னி மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்ப்பேன்!

### டக்ளஸ் கூறுகிறார்

வன்னியில் கிடைத்துள்ள ஒரு ஆசனத்தின் மூலம் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பேன் என முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

வவுனியாவிற்கு நேற்று விஜயம்செய்த அவர் தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்-

வன்னியில் ஒன்றிற்கும் மேற்பட்ட ஆசனங்கள் கிடைக்க வேண்டும் என்று எதிர்பாத்திருந்தேன். எனினும் கிடைத்த ஒரு ஆசனத்தின் மூலம் வன்னி மக்கள் எதிர்கொள் கின்ற பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பேன்.

நான் எந்த அமைச்சையும் எதிர்பார்க்கவில்லை. எனினும் பிரதமரின் பதவியேற்பு நிகழ்விற்கு என்னையும் அழைத்திருக்கின்றனர். அந்த நிகழ்விற்கு வன்னியில் வெற்றி பெற்றவரையும் அழைத்துச் செல்கின்றேன்.

அத்துடன், கூட்டமைப்பின் வீழ்ச்சிக்கு அவர்கள் தான் காரணம். அவர்கள் மேல் மக்களுக்கு நம்பிக்கை இல்லாத நிலையில் நம்பிக்கைக்கு உரியவர்களை மக்கள் தெரிவு செய்துள்ளார்கள்-என்றார்.

## நாட்டில் அடக்குமுறை அதிகரிப்பதற்கு வாய்ப்பு

### மனித உரிமை கண்காணிப்பகம் எச்சரிக்கை

கொழும்பு, ஓக 09

இலங்கையில் எதிர்வரும் காலங்களில் அடக்குமுறைகள் அதிகரிக்க வாய்ப்புள்ளது என சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

பொதுத்தேர்தலை அடுத்து இலங்கையின் நிலைமைகள் தொடர்பில் சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் இவ்வாறு கூறியுள்ளது.

அது தனது அறிக்கையில்-




அரசின் கொள்கைகளுக்கு எதிராக முரண்படுபவர்களுக்கு எதிரான அடக்குமுறைகள் அதிகரிக்கப்படலாம்.

மனித உரிமை ஆர்வலர்கள், பத்திரிகையாளர்கள் சட்டத்தரணிகள் மற்றும் அரசின் கொள்கைகளுக்கு சவால் விடுபவர்களுக்கு எதிராக அரசு அச்சத்தை ஏற்படுத்தும் அச்சுறுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

அண்மைக் காலமாக ஜனாதிபதி கோட்டாபய அரசின் ஒடுக்குமுறை நடவடிக்கைகள் தீவிரமடைந்துள்ளன-என்று குறிப்பிட்டுள்ளது.

## தேசியப்பட்டியல் ஆசனம் யாருக்கு?

### ஐ.தே.கவுக்குள் மோதல்

ஐக்கிய தேசிய கட்சிக்கு, தேசிய பட்டியலில் கிடைத்த ஒரே ஒரு உறுப்பினர் பதவிக்காக கட்சியை சேர்ந்த முன்னாள் அமைச்சர்கள் இருவர் மோதிக்கொள்வதாகத் தகவல் வெளியாகி உள்ளது.

இம்முறை கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்ட இந்த இரண்டு பிரபலங்களும் தங்களுக்கு உறுப்பினர் பதவியை வழங்குமாறு கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அழுத்தம் பிரயோகித்துள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது

தோல்வியடைந்த வேட்பாளர்கள் எவரும் நாடாளுமன்றத்திற்குச் செல்வதற்கு தேசிய பட்டியலில் வாய்ப்பு வழங்கப்படாதென ஐக்கிய தேசிய கட்சியின் தேர்தல் கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேசியப் பட்டியல் தனக்கானதென ரணில் தனக்கு நெருக்கமானவரிடம் குறிப்பிட்டுள்ளார். அதற்கமைய தேசியப் பட்டியலில் ரணில் நாடாளுமன்றத்துக்குச் செல்வதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளதாகக் கூறப்படுகின்றது.

**ஊடகவியலாளர்கள் தேவை**

- **செய்தியாளர்கள்**
- **உதவி ஆசிரியர்கள்**
- **பக்க வடிவமைப்பாளர்கள்**

'ஈழநாடு' தினசரியில் மேற்காணும் பதவிகளுக்கு பொருத்தமானவர்கள் தேவை.
அனுபவமுள்ளவர்கள் விண்ணப்பபிக்கலாம்.

**இல. 707, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.**
email: eelanaduweekly@gmail.com

**சனசமூக நிலையங்களுக்கு பத்திரிகை இலவசம்**

'ஈழநாடு' நாளிதழை இலவசமாக பெற்றுக் கொள்ள விரும்பும் சனசமூக நிலையங்கள் தமது விபரங்களை குறிப்பிட்டு கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.

**கடிதங்களை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:**

**இல. 707, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.**

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் திருதி கோகிலா மகேந்திரன்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ்அன்ரன் கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.30 மணி : பத்திரிகைகள் ஒரு பார்வை
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை
10.30 மணி : அறிந்தும் அறியாமலும்
11.00 மணி : ரசிகன் என்கிற தலைவன்



**பகல்**
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்
1.30 மணி : வீக் என்ட் மூவி
ஐபி மேன்
திரைப்படம்
4.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : கலாய்க்கலாம் வாங்க (நேரலை)
6.00 மணி : திரைக்கதம்பம்
**இரவு**
7.00 மணி : ஸ்பொட் லைட்
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சொல்லாடுகளம்
10.00 மணி : பதிவு

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு
**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
விவேக் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா
**இரவு**
8.00 மணி : திரைப்படம்
விக்ரம் மற்றும் ஜோதிகா நடிப்பில் அருள்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN இசை

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : ஒஸ்கார் ராகங்கள்
10.00 மணி : டான் மிக்ஸ் மசாலா (நேரலை)
**பகல்**
12.00 மணி : நட்சத்திரம்
1.00 மணி : மஞ்சள் வெயில் மாலையிலே ( நேரலை)
3.00 மணி : இசை மேடை
4.00 மணி : வீக் என்ட் எக்ஸ்பிரஸ் (நேரலை)
5.00 மணி : என்றென்றும் இசை
**இரவு**
7.00 மணி : பாட்டு தலைவர்கள்
8.00 மணி : பச்சை கிளி முத்துச்சரம்
9.00 மணி : நேசித்த நினைவுகள்
10.00 மணி : பக் ரு பக்

## ஓம் ரிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.20 மணி : சின்மய சிந்தனை
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : நல்லூர் கந்தன் 15ஆம் நாள்
மாலைத் திருவிழா மறுஒளிபரப்பு



10.00 மணி : நல்லூர் கந்தன் 16 ஆம் நாள்
காலைத் திருவிழா நேரலை
11.30 மணி : பக்திமலர்
**பகல்**
12.30 மணி : திருவிழா
4.30 மணி : நல்லூர் கந்தன் 16ஆம் நாள்
மாலைத் திருவிழா நேரலை
**இரவு**
7.00 மணி : அருளுரை
7.30 மணி : திருவாசகம்
08.00 மணி : நல்லூர் கந்தன் 16ஆம் நாள்
மாலைத் திருவிழா மறுஒளிபரப்பு

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : ஆலயப் பாடலகள்
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : மாதா மன்றாட்டு மாலை
10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
11.00 மணி : ஜெபமாலை
**பகல்**
12.00 மணி : திருகோணமலைத்திருப்பலி
1.00 மணி : மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி : நற்சிந்தனை
3.00 மணி : மறை வகுப்பு
4.00 மணி : நிதர்சனம்
4.30 மணி : திருகோணமலை திருப்பலி
5.30 மணி : பாடல்

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு
12.00 மணி : லுகர் அதான்
**பகல்**
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
6.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) ஊடகம் மறு ஒளிபரப்பு
7.00 மணி : 10.00 மணி - க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி மறு ஒளிபரப்பு
8.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல் மறு ஒளிபரப்பு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) அளவியல்
10.00 மணி : பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) கணக்கீடு
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு)
2.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
3.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்




4.00 மணி : தரம் 5 சுற்றாடல்
5.00 மணி : தரம் 5 கணிதம்
6.00 மணி : தரம் 6-9 ஆங்கிலம்
7.00 மணி : பொது சிங்களம்
7.30 மணி : க.பொ.த உயர் தரம் மாதிரி வினாத்தாள்

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிரைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 09.08.2020 அன்று வெளியிடப்பட்டது.